1979 ஏப்ரல் 26]

செல்வந்தர்கள் கையில்தான் இருக்கிறது, அவைகளை அதிகமாக எடுத்துக் கொள்ள அரசு முயற்சி செய்யுமா? ஏனென்றால், நாட்டு மக்களுடைய, கோடானுகோடி ஏழை மக்களினுடைய உழைப்பால்தான் அந்த நிலங்களின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. அந்த உயர்ந்த மதிப்பை கொடுப்பதற்காக, ஏற்கெனவே இருந்து வந்த நிலங்களை கையகப்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரத்திலுள்ள நிலத்தினுடைய மதிப்பு உயர்வு பெறுவது எப்படியென்றால், பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரியைக் கொண்டு தண்ணீர் வசதி, ரோடு வசதி, விளக்கு வசதி போன்றவைகளை வைத்து கொண்டுதான் அங்குள்ள நிலத்தின் மதிப்பீடு போடப்படுகிறது. நிலங்கள் எங்கிருக்கிறதோ அந்த இடத்தின் முன்னேற்றத்தைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மௌண்ட் ரோடு—அண்ணா சாலையை எடுத்துக்கொண்டால், அங்குள்ள இடத்தின் படி அந்த நிலங்களின் விலை ஒரு கிரவுண்டினுடைய விலை 1 லட்சம், $1\frac{1}{2}$ லட்சம் என்று இருக்கிறது. ஆனால், சென்னை நகரைப்பொருத்தவரை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்றால் ஒரு கிரவுண்டினுடைய விலை குறைந்தது 500-லிருந்து உயர்ந்த பட்சம் மிக முக்கியமாக இருந்தால் 11,500 தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் இன்னும் குறைவாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயக்குடியில் உள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண் 827 — திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி வட்டம், 96, மேற்கு ஆயக்குடி சர்வே எண் 15-ல் ஒரு ஏக்கர் 8 சென்ட் (1.8 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்நிலத்தையும், அதிலுள்ள கட்டிடத்தையும் ஆயக்குடி பேரூராட்சிக்கு சொந்தமாக்கக் கோரி 1974-75-ல் மேற்படி பேரூராட்சியிலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பழனி வட்டம், மேற்கு ஆயக்குடி கிராமத்தில் வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலத்தின் சர்வே எண் தற்போது 174/13. இதன் பரப்பளவு 1.08 ஏக்கர். மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தையும் கட்டிடத்தையும் ஆயக்குடி பேரூராட்சிக்கு சொந்தமாக்க கோரிக்கை இருக்கும்போது ஒரு தனி நபருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவசரமாக பேரூராட்சிக்குத் தேவை யென்று கேட்கும்படியான நேரத்தில் அவரிடமிருந்து வாங்கி கையகப்படுத்த முடியாத நிலைமையில் அரசு தரப்பிலேயே சிலர் தடை செய்வதாக சொல்கிறார்கள். ஒரு தனிநபரிடமிருந்து அதை வாங்குவதற்கு ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? அதிலே அதிக கவனம் செலுத்தி முயற்சி செய்ய அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி இங்கே தகவல்கள் வந்திருக் கின்றன. உங்களுக்கு சரியாகச் சொல்ல வேண்டுமானால் 1974-75-ல் தான் மதுரை உதவி செட்டில்மெண்ட் அலுவலரால் இதற்கு முன்னால் இருந்த அரசின் காலத்தில், அரசுதான் கொடுத்திருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் அந்தப் புகாரைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வரஞ்சிபுரம் பசுபதி ஈஸ்வரர் ஆலயத் திருப்பணி

*வினா எண். 828: திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் 'கள்ளக்குறிச்சி வட்டம்' வரஞ்சிபுரம் கிராமத்தில் இருக்கும் சோழர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட பசுபதி ஈஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணி செய்யக் கோரி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) & (ஆ) தென்னாற்காடு மாவட்டம் 'கள்ளக்குறிச்சி வட்டம்' வரஞ்சிபுரம் கிராமத்தில் இருக்கும் பசுபதி ஈஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணி செய்யக் கோரி, அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை. இருப்பினும் தேவையான திருப்பணி வேலை களைச் செய்ய பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமித்த பின் நடவடிக்கை எடுக்கப்படும்.